# 39

## நிறைவான கற்றல் கற்பித்தலுக்குப் பல்லூடகத்தின் பங்கு

**முனைவர் முரசு நெடுமாறன்**

*மலேசியப் புத்ரா பல்கலைக்கழகம்*

---

### கட்டுரையின் சாரம்

கட்டுரையாசிரியர் கற்றல் கற்பித்தலுக்குப் பாடல்களை ஒலிவடிவில் பயன்படுத்தியபோது விளைந்த பயனைவிடப் பல்லூடகத்தின்வழி மிகுபயன் விளைந்ததென்பதைப் பட்டறிவு வாயிலாய் எடுத்துரைக் கிறார். பல்லூடக முறை பரவலாகச் சில பரிந்துரைகளையும் வழங்குகிறார்.

### முன்னுரை

கற்றல் கற்பித்தல் முறைகள் காலந்தொறும் மாறிவருகின்றன. புதிய புதிய கருவிகளும் கலை உரு வாக்கங்களும் பெருகி வருகின்றன; அணுகுமுறைகளும் மாறிவருகின்றன. அதற்கேற்பக் கல்வித் துறை உலகளவில் மாறுதல் கண்டுவருகிறது. இம்மாறுதல் மேலை நாடுகளில் மிக விரைந்து ஏற்பட்டு வருகின்றது. தொடக்க நிலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை இந்த மாறுதல் நிகழ்ந்து வருகிறது. வீட்டிலிருந்தபடியே கற்றுப் பட்டம்பெற இணையப் பல்கலைக்கழகங்களும் ஏற்பட்டு வருகின்றன.

### தமிழில் பல்லூடக வளர்ச்சி நிலை

தமிழ் இனத்தில் கணினித் துறை வல்லுநர் உலகமெங்கும் பரவியுள்ளனர். ஆங்கிலத்திற்கு அடுத்த நிலையில் தமிழ்மொழி கணினியில் ஆட்சிபுரிந்துவருகிறது. ஆனால் தொடக்க நிலை மாணவர்தம் கற்றல் கற்பித்தலுக்குக் கணினி வட்டுகள் (floppy disk), குறுந்தகடுகள் (VCD) போதிய அளவு வெளிவரவில்லை. மாணவர் உள்ளத்தை ஈர்க்கும் தரம் வாய்ந்த கற்பனைப் படையல்களும், மொழி முதலாய பாடங்களுக்கு துணைப் பொருளாய் விளங்கும் பல்லூடக மென்பொருள்களும் மகிழத்தக்க அளவு உருவாகவில்லை.

### கட்டுரையின் நோக்கம்

இக்கட்டுரை, அவை குறித்த ஆய்வோ குறைநிறைகளைச் சுட்டும் திறனுரையோ அல்ல. இது கட்டுரை யாளர் தன் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் புத்தாக்கங்களைப் பயன்படுத்திப் பெற்ற பட்டறிவின் வெளிப்பாடே ஆகும். கட்டுரையாளர் தாமே எழுதி ஆய்வில் பயன்படுத்திய பாடல்கள் சிலவற்றை வைகறை நிறுவனம் (Vaigarai Productions) 'பாடிப் பழகுவோம் 1, 2' ஆகிய குறுந்தகடுகளில் இடம்பெறச் செய்துள்ளது. கற்றல் கற்பித்தலுக்கும் குழந்தைகள் சுவைத்து மகிழ்வதற்கும் அவை எங்ஙனம் உதவ முடியும் என்பதனைப் பட்டறிவில் உணர்ந்தவாறு எடுத்து விளக்குவதே இக்கட்டுரை யின் நோக்கமாகும்.

### உலகில் தமிழின் நிலை

'தமிழ் மொழிக் கல்வி' தாய் தமிழகத்திலேயே மாற்றாந்தாய் மனப்போக்குடன்தான் (பெரும்பான்மை) கற்பிக்கப்படுகிறது. தமிழ் ஆட்சி மொழியாய் உள்ள சிங்கப்பூரில் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப் படுகிறது. மலேசியாவில் தொடக்கக் கல்வி (ஆறாம் வகுப்பு வரை) தாய்மொழி வழியில் கற்பிக்கப்படு

கிறது (இவ்வாண்டு முதல் கணிதம், அறிவியல் ஆகிய பாடங்கள் ஆங்கிலவழி கற்பிக்கப்படுகின்றன). இப்பள்ளிகளில் குமுகாயத்தின் ஐம்பது விழுக்காட்டு மாணவர்களே பயிலுகின்றனர். மொரீசியஸ் முதலாய நாடுகளில் தமிழ்க் கல்வி அத்துணை ஆழமாகக் கற்பிக்கப்படவில்லை. தமிழ் என்றால் உலகளவில் பெரும்பாலான தமிழர்களால் சற்றுத் தரம் தாழ்த்தி எண்ணும் போக்கே நிலவிவருகிறது. இந்நிலையில் அம்மொழி பற்றிய ஓர் உயர்ந்த மதிப்பை மாணவர்பால் ஏற்படச் செய்யவேண்டுவது மொழி கற்பிப்போர் கடமையாகும்.

### தமிழ் உணர்வேற்றும் பாடல்

மேற்படி கடமையை உணர்ந்த ஆசிரியர் மாணவர்தம் மொழி உணர்வைத் தூண்டும் நோக்கில் கீழ்க்காணும் பாடலைப் பயன்படுத்தினார்; நல்ல வெற்றியும் கண்டார். வளர்ந்தவர்கள் எண்ணத்திலும் இப்பாடல் நல்லுணர்வை ஏற்படுத்திற்று. அப்பாடல் வருமாறு:

**தமிழால் வளர்வேன்**

‘‘அம்மா அப்பா என்று
அன்று பேசக் கற்றேன்;

அழகு தமிழ் மொழியை
இன்று பயிலு கின்றேன்!

மேலும் மேலும் படிப்பேன்;
மேன்மைத் தமிழைப் படிப்பேன்;

தமிழால் இன்று வளர்வேன்;
தமிழை நாளை வளர்ப்பேன்!’’

இப்பாடல் தொடக்கத்தில் இசைப் பின்னணியோடு ஒலி, வரி வடிகளில் மட்டும் கற்பிக்கப்பட்டது. அப்போதே இது மாணவர்களை ஈர்த்தது. இயங்கு படமாக நாடக வடிவிலும் அமைந்து பல்லூடக முறையில் வெளிப்பட்டபோது மாணவர்க்குப் பெருவிருந்தாய் அமைந்தது; அவர்கள் மனத்தில் பதிந்தது; பயனுடைய விளைவுகளை ஏற்படுதியது.

### உறவுச் சொற்கள் அறிமுகம்

மொழிப் பாடத்தில் உறவுச் சொற்களைக் கற்பிக்க பாடல் விளக்கப் பல்லூடக வட்டு பெருந்துணை புரிய முடியும். வெறுமனே ‘அம்மா’, ‘அப்பா’ என்பன போன்ற சொற்களை அறிமுகப்படுத்தினால் விரைந்து சென்று அவை மாணவர் மனத்தில் பதியா. உறவுச் சொற்களை எளிய, இனிய முறையில் உணர்த்தும் கீழ்க்காணும், இசைப் பின்னணியும் இயங்கு காட்சிப் பின்னணியும் அமைந்த பாடல் எதிர்பார்த்ததை விட மிகுதியான பயனைச் சேர்த்தது; மாணவரைத் துள்ளிக் குதித்துப் பாடி ஆடச் செய்தது. அப்பாடல் வருமாறு:

**வாருங்கள்**

‘‘அம்மா அப்பா வாருங்கள்;
அன்பு முத்தம் தாருங்கள்!

பாட்டி தாத்தா வாருங்கள்;
பாட்டும் கதையும் கூறுங்கள்!

அண்ணா அக்கா வாருங்கள்;
அழகாய்ப் படிப்பேன் பாருங்கள்!

தம்பி தங்கை வாருங்கள்;
தைதை என்றே ஆடுங்கள்!''

இப்பாடலில் வரும் சொற்களை அடிப்படையாய்க் கொண்டே மற்ற உறவுச் சொற்களையும் மிக எளிதில் கற்பிக்க முடிந்தது. பாடலுக்கான காட்சிப் பின்னணியை உள்வாங்கிக் கொண்ட மாணவர்கள் மனத் திரையில் குடும்பக் காட்சி தென்படும்; உறவினர் கண்முன் வருவர்; உறவுப் பெயர்களை நன்கு உணர்ந்து மனத்தில் நிறுத்திக்கொள்ள இவை உதவும்.

**இயற்கையின்பால் ஈடுபாடு**

மாணவர்களை இயற்கையின்பால் ஈடுபாடுகொள்ளச் செய்ய வைப்பது பயனுடைய செயலாகும். மலேசியக் கல்வியமைச்சின் நன்னெறிப் பாடக் கலைத் திட்டம் இதனை வலியுறுத்துகிறது. இப்பாடத்தை அணுகும்போது ''பூக்களைப் பியத்து எறியாதே''; ''இலைகளைப் பறிக்காதே'', ''செடிகளை ஒடிக்காதே''; ''மரப்பட்டைகளைச் சிதைக்காதே'' என்பன போன்று எதிர்மறைச் சிந்தனை (negative) எழுமாறு கற்பிப்பது உரிய பயனை நல்காது. ஆக்கச் சிந்தனை (positive) பரவுமாறு பாடம் அமைந்தால் – அதுவும் இசைப் பின்னணியோடு, இயங்கும் அமைப்புடன் கூடிய நாடகப் பாங்கிலும் அமைந்தால் வியத்தகு பயன்கள் விளையும். இந்நோக்கொடு கீழ்க்காணும் பாடல் கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தியபோது மாணவர் பாடத் திறனை எதிர்பார்த்ததற்கு மேலேயே அடைந்தனர். ஒலிப்பேழை மட்டுமே கொண்டு கற்பித்தபோதே நல்ல வெற்றி கிட்டியது. பாடவேளை முடிந்து இடைவேளையின்போது இப்பாடலை மாணவர்கள் பாடி ஆடியது கட்டுரையாளரைப் பெருமகிழ்வில் ஆழ்த்தியது. பல்லூடக வட்டில் மாணவர்களுக்கு இப்பாடல் சென்றபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை; பயனும் பன்மடங்கு பெருகியது. பாடல் பின்வருமாறு:

**கண்டு கண்டு மகிழ்வேன்**

''செடிகளிலே பூவாம்;
கொடிகளிலே பூவாம்;

வளர்ந்த நல்ல மரத்திலே
வண்ண வண்ணப் பூவாம்!

அழகு மிக்கப் பூவை
ஆசை யோடு பார்ப்பேன்;

கண்ணைக் கவரும் பூவைக்
கண்டு கண்டு மகிழ்வேன்!''

**பட்டறிவில் கண்டவை**

மேலே கண்ட பாடல்களெல்லாம் வெறுமனே எடுத்துக் காட்டப் பெற்றவையல்ல; இவை ஒவ்வொன்றும் வகுப்பறைகளில் பல ஆண்டுகள் பற்பல முறை ஒலி வடிவில் பயன்படுத்தப் பெற்று ஆய்வு செய்யப் பெற்றவை. பல்லூடகத்தில் உருவானபோது இவை வியத்தகு முறையில் மாணவர்களைச் சென்றடைந்தன, நல்ல விளைவுகளை ஏற்படுத்தின. வெறும் இசைப் பின்னணி மட்டும் கொண்டு கற்பித்த காலத்திலேயே இவை நல்ல வெற்றி கண்டன; நாடகப் பாங்குடன் குறுந்தகடு வடிவில் வந்தபின் ஆய்வு நோக்கில் இப்பாடல்களை வழங்கியபோது மாணவர்களை இவை பேரளவு ஈர்த்தன.

**பல்வகைப் பயன்பாடு**

மேலே கண்ட செய்திகளால் இவை பள்ளிப் பாட வேளைகளில் மட்டும் பயன்படுத்தத் தக்கவை என்று எண்ண வேண்டா. வீட்டுப் பயன்பாட்டுக்கும் ஏற்றவை; பிறமொழிப் பள்ளிகளில் கற்று, ஆங்கிலம் முதலான மழலைப் பாடல்களில் (ரைம்ஸ்) மூழ்கிக் கிடந்த பிள்ளைகள் கூட இப்பாடல்களைக் கேட்டு

மகிழும் செய்தியும் பாடி மகிழும் செயலும் கட்டுரை ஆசிரியருக்கும் இவ்வுருவாக்கத்தில் ஈடுபட்டோர்க்கும் ஊக்கம் சேர்க்கின்றன.

### சமுதாயப் போக்கு

இது போன்ற உருவாக்கங்களை ஏற்றுப் போற்றி ஆதரவு வழங்கும் மனப்போக்கு இன்னும் சமுதாயத்தில் வளரவில்லை. மேலும் பொருள்வளம் படைத்தோர் உருவாக்கும் தகுதியும் திறமையும் பெற்றோர் எதிர்காலத் தலைமுறையை எண்ணிப் பார்ப்பதில்லை. அவர்கள் தமிழ்வழிச் சிந்தனையாளர்களாய் வரவேண்டுமென்று எண்ணுவதில்லை. பொருள்வளங் கொண்ட பெற்றோரும் பிறநாட்டார் உருவாக்கங்களைப் பொன்போல் போற்றிக் குழந்தைகளுக்கு அவற்றை வாங்கித் தரும் போக்கே நீடித்துவருகிறது. இப்போக்கு பின்னைய தலை முறையினரை இனஉணர்வினின்று விலக்கி எங்கோ போகச் செய்து விடும். உரிய காலத்தில் உரியன செய்யாவிட்டால் எதிர்காலச் செல்வர்களைச் சமுதாயம் இழந்துவிடும்; அவர்கள் இனப் பெயர் தெரியா ஏதிலிகளாகிவிடுவர்.

### பரிந்துரைகள்

தமிழினத்தின் கால்வழியினர் இக்கணினி ஊழியின் அறைகூவல்களை எதிர்கொண்டு கற்றல் கற்பித்தலில் தமிழ்மொழி, தமிழிலக்கியம் புகைபடிந்த கண்ணாடியாகிவிடாமலிருக்கக் கீழ்க்காணும் நடவடிக்கைகள் துணைபுரியும்.

1. கற்றல், கற்பித்தலுக்குத் துணைபுரியும் வண்ணம் கணினியில் சுவையான உருவாக்கங்கள் மலரவேண்டும்.

2. மொழி என்பது இயல், இசை, நாடகம் ஆகிய கூறுகள் அடங்கியது. இயலை மட்டுமே முன்னிலைப் படுத்தி மற்ற கூறுகளை ஒதுக்கிவிட்டால் அஃது ஒரு மொழிப் பாடம் ஆகாது; இனப் பண்பாட்டையும் வெளிப்படுத்தாது. அதனால் மொழியின் மூன்று கூறுகளும் ஒருங்கிணைய ஆசிரியர்களுக்குத் துணைபுரியும் மென்பொருள்கள் பல்லூடக முறையில் நிரம்ப உருவாக்கப்படவேண்டும்.

3. ஆங்காங்கே உருவாகும் பயனுடைய மென்பொருள்களைத் தேடிப் பிடித்துப் பள்ளிகளில் ஆசிரியர்களும் வீடுகளில் பெற்றோரும் சிறுவர்களுக்கு வழங்கவேண்டும்; அவர்கள் அவற்றை நன்கு பயன் படுத்திக்கொள்ள வாய்ப்பளிக்கவேண்டும்.

### நிறைவுரை

வெறுமனே குழந்தை இலக்கிய மாநாடுகள், கருத்தரங்குகள் கூட்டுவதாலும், ஆய்வுக் கட்டுரைகள் எழுதிப் படிப்பதாலும் குழந்தைகளுக்குப் பயனில்லை. எத்தனை குழந்தை இலக்கியங்கள் வெளிவந்துள் ளன என்று எண்ணிப் பார்ப்பதிலும் பெருமை இல்லை. குழந்தைகள் மனத்தில் எத்தனை படைப்புகள் பதிந்து வாழ்கின்றன; பயன் சேர்க்கின்றன என்பனவற்றில் தான் பெருமை அடங்கியுள்ளது. தமிழில் காலத்திற்கேற்ற கனிணி உருவாக்கங்கள் நிரம்ப மலர்தலிலும் அவை குழந்தைகளுக்குச் சென்று எட்டுவதிலுமே எதிர்கால இன அடையாளம், பண்பாட்டுச் சீர்மை போன்ற பெருமைகள் அடங்கியுள்ளன என்பனவற்றை மறவாமல், புத்தாக்கங்களை மலர்விப்பதிலும் மலர்ந்தவற்றின் மணம்பரவ உதவுவதிலும் சமுதாயம் கருத்துச் செலுத்துதல் வேண்டும்.